# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2013 - 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 11

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. குடிமக்கள் காப்பியம் என அழைக்கப்படுவது

அ) திருக்குறள் ஆ) மணிமேகலை

இ) சிலப்பதிகாரம் ஈ) மூதுரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. ஆடலரசிக்கான தலைக்கோல் பட்டத்தைப் பெற்றவள்

அ) மணிமேகலை ஆ) மாதவி

இ) கண்ணகி ஈ) மாதுரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தனது இல்லத்தில் முதன்முதல் நூலகத்தைத் தொடக்கி வைத்தவர்

அ) கே.நரசிம்மன் ஆ) தாவீதுஅடிகளார்

இ) ஆர்.இரங்கநாதன் ஈ) க.மு.செல்லப்பா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. உழவர் அல்லும் பகலும் அயராது உழைத்தனர். இதில் வந்துள்ள அல்லும் பகலும் என்பது

அ) இணைமொழி ஆ) அடுக்குத் தொடர்

இ) அடுக்கிடுக்குத்தொடர் ஈ) இரட்டைக்கிழவி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி

அ) நடநட ஆ) பாடு பாடு

இ) படபட ஈ) ஓடு ஓடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. கோவலன் மாதவியின் யாழை வாங்கிப் புகழ்ந்து பாடிய ஆறு

அ) கங்கை ஆ) காவேரி இ) யமுனை ஈ) சிந்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. அன்மொழித்தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) பொற்றொடி ஆ) விளைபயிர்

இ) வெண்சுவர் ஈ) மலர்க்கை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. குடிமக்களுக்கான கூத்து

அ) வேத்தியல் ஆ) இசையியல்

இ) பொதுவியல் ஈ) அறிவியல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. போற்றுதலுக்குரிய கல் என்று சாலை இளந்திரையன் கூறுவது.

அ) சூளைக்கல் ஆ) நடுகல்

இ) வைரக்கல் ஈ) படிக்கல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. எதற்கும் எல்லையுண்டு. இக்கருத்தை விளக்கும் பழமொழி

அ) வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும்.

ஆ) சிறுதுளி பெருவெள்ளம்.

இ) யானைக்கும் அடி சறுக்கும்.

ஈ) அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. யாழ்நூலகம் திறந்துவைக்கப்பட்ட ஆண்டு

அ) 1954 ஆ) 1959 இ ) 1981 ஈ) 1958

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. பாடிய என்பது

அ) வினை முற்று ஆ) வினையெச்சம்

இ) பெயரெச்சம் ஈ) வினையடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. உம்மைத் தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) அறுசுவை ஆ) தேன்மொழி

இ) ஓடுநீர் ஈ) இராப்பகல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. "எம்மால் முடியும் எதிர்த்தால் விடியும்" என்று பெண்ணினத்தைத் தட்டி எழுப்பிய கவிஞன்

அ) உதயைவீரையன் ஆ) சாலை இளந்திரையன்

இ) அம்பி ஈ) இரவி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. செந்தாமரை விரியத் தேமாங் கொழுந்தொழுக வந்தகாலம்

அ) கார்காலம் ஆ) கூதிர்காலம்

இ) இளவேனிற்காலம் ஈ) முதுவேனிற்காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. அறிவுக்கடல் என்பது

அ) உயர்வுநவிற்சி அணி ஆ) உருவக அணி

இ) உவமை அணி ஈ) தற்குறிப்பேற்ற அணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. ஒன்றைப்பற்றி மேலோட்டமாக அறிந்திருத்தல்

அ) துறைபோதல் ஆ) கயிறு திரித்தல்

இ) நுனிப்புல் மேய்தல் ஈ) தட்டிக்கழித்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. சிலப்பதிகாரக் கதை தொடங்கும் நாடு

அ) சோழநாடு ஆ) சேரநாடு

இ) ஈழநாடு ஈ) பாண்டிநாடு

அ) ☐ ആ) ☐ இ) ☐ ஈ) ☐

19. மானிடா சொல் என்ற கவிதையை எழுதியவர்

அ) உதயை வீரையன் ஆ) சாலை இளந்திரயன்

இ) இரவி ஈ) அம்பி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. சிலப்பதிகார வாழ்த்துப் பாடலில் இளங்கோவடிகள் போற்றியது

அ) இயற்கையை ஆ) இறைவனை

இ) அரசனை ஈ) நாட்டை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. "பாடிய தமிழை மட்டும் பாதியில் விட்டிடாதே"... என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள கவிதை

அ) இனியும் ஆ) ஓடிடும் தமிழா

இ) மானிடா சொல் ஈ) ஓங்குபுகழ் கற்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. "குடிப்பது கூழ் கொப்புளிப்பது பன்னீர்". இப்பழமொழி குறித்து நிற்பது

அ) சிக்கனம் ஆ) திருப்தியின்மை

இ) பட்டறிவின் பயன் ஈ) வீண் ஆடம்பரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. தம்பிக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தேன். இதில் வந்துள்ள நான்காம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்

அ) தம்பி ஆ) சொல்லி இ) பாடம் ஈ) கொடுத்தேன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. வீட்டுக்கு வெள்ளையடித்தான். இதில் வந்துள்ள ஆகுபெயர்

அ) சினையாகுபெயர் ஆ) பொருளாகுபெயர்

இ) இடவாகுபெயர் ஈ) குணவாகுபெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. ய் ர் ல் வ் ழ் ள் என்னும் எழுத்துக் கூட்டம்

அ) மெல்லினம் ஆ) இடையினம்

இ) வல்லினம் ஈ) உயிரினம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. மாதவி ஆணாக உருவகித்துப் பாடிய நகர்

அ) புகார் ஆ) மதுரை இ) கூடல் ஈ) தில்லை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. மாறன் உயரமான மரத்தில் இருந்து விழுந்தான். இதில் இடம்பெறாத சொல்லிய உறுப்பு.

அ) எழுவாய் ஆ) பயனிலை

இ) செயப்படுபொருள் ஈ) அடைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. கோவலன் கொலையுண்ட இடம்

அ) மிதிலை ஆ) மதுரை

இ) பூம்புகார் ஈ) காவிரிப்பூம்பட்டினம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. இலக்கண அடிப்படையில் இடம்

அ) 3 ஆ) 6 இ) 4 ஈ) 5

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. இலங்கையில் கண்ணகிக்குக் கோவில் அமைத்த மன்னன்

அ) சேரன்செங்குட்டுவன் ஆ) கயவாகு

இ) சேரலாதன் ஈ) இராவணன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

வள்ளுவரது திருக்குறளைப் பண்டைப் புலவோர் பலரும் புகழ்ந்து பாடினர். அப்புகழ்ப் பாக்கள் அனைத்தும் 'திருவள்ளுவமாலை' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. அத்தகைய திருக்குறளைப் பிறமொழியாளரும் புகழ்ந்து போற்றுகின்றனர். குறளைப் போற்றிய ஔவையாரும் "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்திக் குறுகத் தரித்த குறள்" என்றார். ஆம். அணுவைத் துளைத்து அதனுள் ஏழுகடல்களையும் புகுத்தியிருப்பது போன்று இச்சிறு குறள் ஒவ்வொன்றும் விரிந்த பரந்த பொருளைக் கொண்டுள்ளது என்பது அவரது கருத்து. ஆனால் செருமனியப் பேரறிஞரான அல்பேர்ட் சுவைட்சர் அதற்கும் மேலே சென்று "குறளைப் போன்று செம்மார்ந்த கருத்துகள் கொண்ட வேறொரு நூலை நான் உலகில் காணவில்லை" என்றார். அவருக்கு மிகப் பிடித்த கருத்து ஒருவனும் ஒருத்தியும் இல்வாழ்க்கை வாழ்வது பசித்தோர்க்கு உணவளித்து விருந்தோம்பத் தான். அல்லாவிடில் இல்வாழ்வு ஏன்? இந்தக் கருத்து ஒரு புதிய கருத்து என்று பாராட்டுகிறார். உள்ளத்தில் அன்பிலார் பிறர்க்கொன்றும் ஈயார். அன்புடையோர் பிறர்க்குப் பயன்படுமானால் தமது எலும்பையும் ஈவர். இந்தக் கருத்தும் சுவட்சரை மிகவும் கவர்ந்தது. இது உயர்ந்ததும் உண்மையான கருத்துமாகும். குமணமன்னன் தன்னை நாடி வந்த புலவர் பெருஞ்சாத்தனாருக்கு ஈய ஒன்றும் இல்லையே என்று வருந்தினான். தன் தலையைக் கொண்டு வருவோருக்குப் பரிசளிப்பதாக இளங்குமணன் பறை அறைந்திருந்தது நினைவுக்கு வரவே தன் தலையைப் புலவருக்கு வெட்டிக் கொடுக்க முன்வந்தான். குமணனுக்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் வள்ளுவர். இத்தகைய நிகழக்கூடிய உண்மைக் கருத்துகளை முன்கூட்டியே கூறிய திருக்குறளை அறிஞர் போற்றுவதில் வியப்பேதும் இல்லை.

1. திருக்குறளைப் புகழ்ந்து கூறிய வெளிநாட்டுப் பேரறிஞர் யார்?

2. உள்ளத்தில் அன்புடையோரது இயல்பு எத்தகையது என வள்ளுவர் கூறுகிறார்?

3. புலவர் பெருஞ்சாத்தனாருக்குத் தன் தலையைக் கொடுக்க முன்வந்த மன்னன் யார்?

4. ஔவையார் திருக்குறளை எவ்வாறு புகழ்ந்து கூறுகின்றார்?

5. திருக்குறளைப் புகழ்ந்து பாடிய புகழ்ப்பாக்கள் அனைத்தும் எப்பெயரால் அழைக்கப்படுகின்றன?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. எத்தனையாம் நூற்றாண்டில் தமிழர் பகுதிகளில் நூல்நிலையங்கள் தோற்றம் பெற்றன?

2. வீரையனது கவிதையில் எதனால் நாய்களும் பேய்களும் நாட்டிடை ஆட்டம் போடுவதாகக் கூறப்படுகிறது?

3. சிலம்பை விற்கச் சென்றபோது கோவலன் ஏன் நடை தளர்ந்து சென்றான்?

4. 'புத்தரின் படுகொலை' என்ற கவிதையை எழுதிய கவிஞர் யார்?

5. யாழ் நூலகக் கட்டிடத்தை வடிவமைத்தவர் யார்?

6. செங்குட்டுவன், கயவாகு, இளங்கோவடிகள் மூவரும் கண்ணகி கதையுடன் எவ்வகையில் தொடர்புபட்டுள்ளனர்?

7. சாலை இளந்திரையனது கவிதையில் விலையால் உயர்ந்த கல் எது? கலையால் உயர்ந்த கல் எது?

புள்ளிகள் 10

**4) பின்வரும் கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

## கல்லறை மேனியர்

கல்லறையில் உறங்கும் காவல் தெய்வங்களே
சொல்லேதும் இல்லை ஐயா உம்பெருமை பாடுதற்கு

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. இருபெயரொட்டுப் பண்புத் தொகைக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

______________________________

2. பின்வரும் மரபுச் சொற்களை வைத்துப் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

அ) வாழையடிவாழை :-

______________________________

______________________________

ஆ) கன்னங்கரிய :-

______________________________

______________________________

இ) கடுகடு :-

______________________________

______________________________

3. பின்வரும் புணர்ச்சி வகைகளின் பெயர்களைத் தருக.

அ) வானவில் :-______________________________

ஆ) கவிதைப்போட்டி:-______________________________

இ) மட்குடம் :-______________________________

4. குற்றியலுகர எழுத்துகள் எத்தனை? அவை எவை?

______________________________

5. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

அ) இடவழு :-______________________________

ஆ) காலவழு :-______________________________

இ) பால்வழு :-______________________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

உலகில் எங்கு பார்த்தாலும் இயற்கையின் பேரழகு. ஆனால் அவற்றை மக்கள் கவனிப்பது குறைவு. கதிரவன் காலிக்கும் போது வானத்தில் தோன்றும் வண்ணக் காட்சிகளைப் பார்க்கக் கண்ணிரண்டு போதாது. புல்லின் மேல் இருக்கும் பனித்துளிகள் வைரம்போல் மின்னுவதை எங்களில் எத்தனைபேர் கண்டு களித்திருக்கின்றோம். அழகுக் கோலங்களாகக் கண்ணைக் கவரும் வகையில் பறந்து செல்லும் பறவைக்கூட்டங்களைப் பார்த்து மகிழ்ந்திருக்கின்றீர்களா? பார்க்கும் இடமெல்லாம் வண்ணங்களைத் தெளித்து விட்டாற்போல் வண்ண வண்ண இதழ்களைக் கொண்ட பூக்கள். இப்பூக்களின் மேல் தேன் எடுப்பதற்காகச் சுற்றித்திரியும் வண்டுகளின் இசை ஒலி, காலையில் எழுந்து தம்கடமைகளைச் செய்யத் தொடங்கும் மக்களின் ஆரவார ஒலி, பள்ளி செல்லும் பிள்ளைகளின் சிரிப்பொலி. இவற்றைப் போன்று இயற்கை அழகுகளைத் தாங்கிவரும் காலைப் பொழுதை நம்மில் எத்தனை பேர் சுவைத்திருக்கின்றோம். செயற்கைக்கு அடிமையாகிவிட்ட மாந்தன் இன்று இயற்கையை மறந்து வருகிறான். இயற்கை இன்பங்களை இழந்து வருகிறான்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ சிலப்பதிகாரக் கதையைச் சுருக்கி எழுதுக.

★ இக்காலக் கவிதைகள் பற்றி உமது கருத்தும் அவற்றுள் உமக்குப் பிடித்த கவிதை. ஏன்?

★ 'எங்கே வாழ்ந்தாலும் தமிழராய் வாழ்வோம்'

புள்ளிகள் 20